## ❧ கேள்வி:

## "ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் தேவன் கொடுத்த அதிகாரம் என்ன?"

## ❧ பதில்:

*இரு கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி கர்த்தருடைய இராப் போஜனத்தை ஆசரிக்கும்போது, அவர்கள் ஒரு புதிய ஏற்பாட்டு சபையாராகின்றனர். சிலவேளைகளில் ஒரு கணவன் மனைவி மட்டும் இருந்தால் (ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் போல) அவர்களும் கூட, "அவர்கள் வீட்டிலே கூடி வருகின்ற சபை" (ரோமர் 16:5; 1 கொரி. 16:19; கொலோ. 4:15; பிலேமோன் 2 ஐக் காண்க) ஆகின்றனர். அவர்கள், கர்த்தருடைய நாமத்தினாலே "இரண்டு பேராவது மூன்று பேராவது எங்கே கூடியிருக்கிறார்களோ" "அங்கே அவர்கள் நடுவில்" நான் இருக்கிறேன் என்ற தெய்வீக வாக்குறுதியில் களி கூறுகின்றனர் (மத். 18:20).*

*கென்டக்கி மாகாணத்தில், நிக்கொலஸ்வில் என்ற இடத்தில் கிறிஸ்தவரல்லாத கணவரைக் கொண்டிருந்த கிறிஸ்தவப் பெண்மணி ஒருவர், அந்நகரில் இருந்த இன்னொரு கிறிஸ்தவப் பெண்மணியைக் கர்த்தருடைய நாளில் ஆராதனைக்கென்று அழைத்தபோது, அப்பட்டணத்தில் கர்த்தருடைய சபை ஆரம்பமாயிற்று. இவ்விருவரும் இணைந்து, பாடல்கள் பாடி, ஜெபம் செய்து, வேதவசனங் களை வாசித்து, கர்த்தருடைய பந்தியை ஏற்று, அவ்விருவரின் காணிக்கைகளையும் வாரா வாரம் சேகரித்து வந்தனர். இவ்விரு பெண்மணிகளின் தேவபக்தி, இன்று நிக்கொலஸ்வில் என்ற அப்பட்டணத்தில் உள்ள பெரிய, ஊழிய-சிந்தனையுள்ள ஒரு சபைக்கு ஆரம்பம் என்றாயிற்று.*

*எந்த புதிய ஏற்பாட்டு சபைக்கும், அது எதை உபதேசிக் கிறது என்ற வகையில் ''குறிப்பிட்ட'' உபதேசம் ஒன்றும் இல்லை, ஏனெனில் ''அப்போஸ்தலருடைய உபதேசம்'' (அப். 2:42) என்ற உபதேசத்திற்குள் அது கட்டுப்பட்டிருக்க*

*வேண்டும். அப்போஸ்தலருடைய உபதேசம் "பரலோகத்தில்" தொடங்கி வைக்கப்பட்டது, பன்னிரு அப்போஸ்தலர்களும் அதற்கு வாயாக மட்டுமே இருந்தனர். இயேசு அவர்களிடம்: ''பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப் பட்டிருக்கும் (கிரேக்கம்: estai dedemena); பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க் கப்பட்டிருக்கும் (கிரேக்கம்: estai lelumena)" என்று கூறினார் (மத். 18:18).*

*அவர்கள் "கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள்" (2 கொரி. 5:20) என்று அழைக்கப்பட்டதால், அவர்கள் எடுத்துச் செல்லும் - பேச்சுக்கள் மிக முக்கியமானவைகளாகும். அவர்கள், ''பன்னிரண்டு சிங்காசனங்களில்'' உட்காருபவர்களாக (மத். 19:28) விளக்கப்பட்டனர்.*

*பன்னிருவரின் அதிகாரம், எருசலேமில், கி.பி. 30ல் பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கிற்று. அது பன்னிருவரின் மரணம் வரைக்கும் மட்டுமல்லாது, ''உலகத்தின் முடிவு பரியந்தம்" (மத். 28:20) நீடித்திருக்க வேண்டியிருந்தது.*

*எந்த உபதேசமாயிருப்பினும், ''சத்திய ஆவியையும், வஞ்சகத்தின் ஆவியையும்" எப்படிப் பகுத்து வேறுபடுத்துவது என்று ஒவ்வொரு கிறிஸ்தவரும் அறிந்துள்ளார்: ''இது அப்போஸ்தலர்களிடம் இருந்து வருகிறதா?'' என்று அவர் கேட்க வேண்டும். "தேவனை அறிந்தவர்கள் எங்களுக்குச் செவி கொடுக்கின்றனர்'' என்றும் "தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவி கொடுக்கிறதில்லை'' என்றும் ஒரு அப்போஸ்தலர் எழுதினார் (1 யோவா. 4:6).*

*பவுல், ''இந்தப் பிரமாணத்தின்படி (கிரேக்கம்: kanon, அப்போஸ்தலிக்க "உபதேசச் சட்டம்") நடந்து வருகிறவர்கள் எவர்களோ அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக" என்று கூறினார் (கலா. 6:16). மூப்பர்கள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஒரு சபையானது அப்போஸ்தலிக்கமல்லாத உபதேசம் அதற்குள் புகுந்துவிடாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. பேதுரு, "உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்'' (2 பேது. 2:1) என்று எச்சரித்தார். இதே காரணத்தினாலேயே பவுலும், "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினை*

*களையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்'' என்று எழுதினார் (ரோமர் 16:17).*

*ஒவ்வொரு சபையும் தனது சொந்த செயல்பாடுகளைக் கவனிக்கவும், சுயாதீனமுள்ளதாயிருக்கவும், சுய ஆளுகையுள்ள தாயிருக்கவும் அப்போஸ்தலிக்க அதிகாரத்தைப் பெற்றுள்ளது. எருசலேம் சபையில் மூப்பர்கள் ஏற்படுவதற்கு முன்னதாகவே சுய ஆளுகை அமைப்பின் கொள்கைகளை அப்போஸ்தலர்கள் உணர்ந்திருந்தனர். உபகாரக்குழு ஒன்றை ஏற்படுத்தும் அவசர நிலை ஒன்று எழுந்தது. பன்னிரண்டு சுவிசேஷகர்களும் (பன்னிரண்டு அப்போஸ்தலர்களும்) அங்கிருந்தபோதும், அவர்கள் தங்களைச் சபையின் பொறுப்பாளர்கள் என்று கருதவில்லை. அவர்கள் சபையின் சுயாதீனத்தை மதித்தனர்.*

*"சீஷர்களின் கூட்டத்திற்கு" அவர்கள் அந்தக் குழுவுக்கான நபர்களை ''தேர்ந்து கொள்ள வேண்டும்'' (கிரேக்கம்: episkeptomai, "தேர்ந்தெடு" என்பதே இதன் பொருள்) என்பதே அவர்களுடைய ஏவப்பட்ட கட்டளையாகும். பின்பு அந்தப் பன்னிரு சுவிசேஷகர்களும் ''இந்த வேலைக்கென்று'' தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நியமனம் செய்யமுடியும் (கிரேக்கம்: kathistemi, "பொறுப்பாளராக்குதல்" என்பதே இதன் பொருள்) (அப். 6:2, 3).*

*''சாதாரண உறுப்பினர்கள்'' (இன்றைய நாட்களில் இவ்விதம் தவறாய் அழைக்கப்படுகின்றது) தேர்ந்தெடுக்கும் பணியைச் செய்தனர். வாக்களித்தோ அல்லது வேறு எவ்விதத்திலோ, அவர்கள் புதிய ஏற்பாட்டு சபையின் சுய - ஆளுகைக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தினர்.*

*லீஸ்திரா, இக்கோனியம் மற்றும் அந்தியோகியாவில் இருந்த சபைகளில் பவுலும், பர்னபாவும் ஆகிய இரு சுவிசேஷ கர்களும் "அந்தந்த சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை" "ஏற்படுத்தினர்"* (KJV) *அல்லது "நியமித்தனர்"* (ASV) *(அப். 14:23). பவுலும், பர்னபாவும் மூப்பர்களை தேர்ந்தெடுக்க வில்லை, ஆனால் அவர்களால் மூப்பர்கள் நியமிக்கப்பட்டனர். லூக்காவின் வார்த்தையாகிய cheirotoneo* (*cheir என்றால் "கை" மற்றும் teino என்றால் ''நீட்டுதல்'' என்று பொருள்) என்பதிலிருந்து, ஒருவரின் பெயரை அங்கிகரிக்கக் கைகளை உயர்த்துதல் என்று ஆலோசிக்கிறோம். ஆக சபையில்*

*''வாக்களித்தல்'' மூலம் இந்தத் தேர்ந்தெடுக்கும் பணி நடைபெற்றது.*

*பவுலும், பர்னபாவும் சபையாரையே தேர்ந்தெடுக்கச் சொன்னதன் மூலம் உள்ளூர் சுய ஆளுகை அமைப்பை, மதித்தனர் என்று லூக்காவின் ஏவப்பட்ட செய்தியானது காட்டுகின்றது. அதன் பிறகு, பார்வையிடும் அவ்விரண்டு சுவிசேஷகர்களும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை மூப்பர் களாக நியமித்தனர்.*

*இதே வழியில், கிரேத்தாத் தீவில் இருந்த சபைகளைக் காணச் சென்ற தீத்து என்ற சுவிசேஷகனும்கூட மூப்பர்களா வதற்கு மனிதர்களைத் ''தேர்ந்தெடுக்கும்''படி (கிரேக்கம்: episkeptomai) பவுலினால் கட்டளை பெறவில்லை. மாறாக, அவர், அவர்களை "நியமிக்க" அல்லது "ஏற்படுத்த" (கிரேக்கம்: kathistemi) வேண்டியதாய் இருந்தது (தீத்து 1:5).*

*எருசலேமில் அப்போஸ்தலர்கள் உபகாரக் குழுவிற்காக மனிதர்களை நியமிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அதே கிரேக்க வார்த்தையைப் பவுல் பயன்படுத்தினார் (அப். 6:2, 3). அந்த முன்மாதிரி பின்பற்றப்பட்டிருந்தால், குறிப்பிட்ட அச்சபைகளில் இருந்த உறுப்பினர்கள், மூப்பர்களாகப் போகிறவர்களைத் தேர்ந்தெடுக்க, தீத்து அவர்களை அவ்வூழியத்திற்கு நியமித்திருக்க வேண்டும். பார்வையாள ராகிய தீத்துவைப் பார்க்கிலும், உள்ளூர் உறுப்பினர்கள் தங்களிலிருந்து, தாங்கள் நன்கு அறிந்த மக்களிலிருந்து இந்தத் தேர்ந்தெடுத்தலைச் செய்வது மிகுந்த பொருளுள்ளதாகும்.*

*மேற்கண்ட முன்னுதாரணமானது, மூப்பர்கள் இல்லாத சபையானது "சுவிசேஷகனுடைய மேற்பார்வையில்" இருக்க வேண்டும் என்ற உபதேசத்தில் உள்ள தவறைச் சுட்டிக் காட்டுகிறது. வேதரீதியாக, சுவிசேஷகர்களுக்கு அதிகாரம் இல்லை. அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தை மறு - பிரசங்கம் செய்வதே அவர்கள் வேலையாகும்.*

*தீத்து, கிரேத்தாத் தீவில் "சகல அதிகாரத்தோடும்" (தீத்து 2:15) போதித்ததாகப் பவுல் கூறுவதால், சிலர் கிரேத்தா தீவில் இருந்த எல்லா சபைகளுக்கும் தீத்து பொறுப்பாளராக இருந்ததாகக் கருதுகின்றனர். ஒரு சுவிசேஷகன், தன்மேல் அப்போஸ்தலர் கைகளை வைப்பதால் மட்டுமே (அப். 8:18) தவறிழைக்காத போதகனாகி, அதன்மூலம் "சகல அதிகாரமும்" பெற்றிருக்க முடியும்.*

*சுவிசேஷகனாகிய தீமோத்தேயுவின்மேல் பவுல் தனது கைகளை வைத்தார் என்று நாம் அறிந்துள்ளபடியால் (2 தீமோ. 1:6), கிரேத்தா தீவின் மத்தியில் தீத்துவை விட்டுவந்த போது அவர்மேல் பவுல் தமது கைகளை வைக்காது விட்டுவந்தார் என்று நினைப்பது ஏற்புடையதல்ல. பவுல் அற்புத விதமாக தமது கைகளை வைக்காமல், தீத்து ''சகல அதிகாரமும்'' பெறுவது என்பது முடியாத செயலாகும்.*

*மூப்பர்கள் நியமிக்கப்பட்ட பிறகும் கூட, பிராந்திய சபைக்கு முதலில் கொடுக்கப்பட்ட அதிகாரம் இன்னும் அச்சபையில் இருப்பதாயிருக்கிறது. அதேபோல, மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைப்பெற்ற பிராந்திய சபை, உண்மையற்ற மூப்பர்களை விலக்கிவைக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது.*

*பவுல், எபேசுவிலிருந்த மூப்பர்களை, "... உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள்" (அப். 20:29, 30) என்று கூறி எச்சரித்தார். "மூப்பருக்கெதிராகக் குற்றச்சாட்டு" ஒன்று "இரண்டு மூன்று பேருடைய சாட்சிகளோடு கொண்டு வரப்படுகையில்'' அந்த மூப்பர், "எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்ளப்பட வேண்டும்" (1 தீமோ. 5:19, 20).*

*உண்மையற்ற மூப்பர் வெளியேற்றப்பட முடியாதென்று கூறுவது அறிவுடைமையாகாது. தலைமைத்துவத்தில் ஒரு மனிதரை நியமிக்க அதிகாரம் பெற்றுள்ள ஒரு சபை அதிலிருந்து அவரை நீக்கவும் உறுதியாகவே அதிகாரம் பெற்றுள்ளது.*

*மூப்பர்கள் இருந்தாலும், இல்லையென்றாலும், உள்ளூர் சபைக்கு அளிக்கப்பட்டுள்ள சுய ஆளுகை அமைப்பானது அதன் உறுப்பினர்கள் "ஒன்று கூடி" அவர்கள் ஐக்கியத்திலிருந்து "துன்மார்க்கமான மனிதனை விலக்கி வைக்க" அவர்களை அனுமதிக்கின்றது (1 கொரி. 5:4, 13). கிறிஸ்தவர்கள், "ஒழுங்கற்று நடக்கிற எந்த சகோதரனையும் விட்டு விலக வேண்டும்'' (2 தெச. 3:6).*

*அதே போல, சபையின் அன்றாடப் பணிகள் யாவும், அது அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருக்கும் வரையில், அதே சபையினாலே முடிவு செய்யப்படுகின்றது. அப்போஸ்தலருடைய உபதேசம் சபை கூடிவருதல் (எபி. 10:25) என்று குறிப்பிடுகிறது, ஆனால் அந்த உபதேசத்தில் சபை கூடிவருதல் ஒருவருடைய வசிப்பிடத்திலா, வாடகைக்கு*

*எடுத்த ஒரு பெரிய அறையிலா அல்லது சபையின் கட்டிடத்திலா என்பதைப்பற்றி குறிப்பிடப்படவில்லை. சபையின் உறுப்பினர்களே இடத்தை முடிவு செய்கின்றனர்.*

*அப்போஸ்தலருடைய உபதேசம் "ஒருவருக்கொருவர்" மற்றும் "தேவனுக்கு" "ஞானப்பாடல்களை" பாடும்படி குறிப்பிடுகிறது (கொலோ. 3:16). எந்தப்பாடல் புத்தகத்தை பயன்படுத்துவது, மற்றும் பாடல்களில் வழி நடத்துவது யார் என்பது சபையாரின் முடிவாகவே இருக்கிறது.*

*அப்போஸ்தலருடைய உபதேசம், வேதவசன வாசிப்பையும் (கொலோ. 4:16; 1 தெச. 5:27), ஒருவருக்கொருவர் பக்தி விருத்தியுண்டாக்குதலையும் (1 தெச. 5:11) குறிப்பிடுகிறது. இவ்விதமாக, இவைகளே கிறிஸ்தவ சபை கூடிவருதலில் சேர்க்க வேண்டும், ஆனால் சபை கூடிவருகையில் இவைகளுக்கு எவ்வளவு நேரம் தரப்படவேண்டும் என்பது பிராந்திய சபையார் முடிவு செய்ய வேண்டியதாகும்.*

*மேலும், அப்போஸ்தலருடைய உபதேசம், ஒவ்வொரு கிறிஸ்தவரும் "வாரத்தின் முதல்நாள்தோறும்" "தன் வரவுக்குத் தக்கதாக" காணிக்கை கொடுக்க வேண்டும் (1 கொரி. 16:1, 2) என்று குறிப்பிடுகிறது. அதோடு கூட, விசேஷித்த பணம் சேகரித்தல் (அப். 11:27-30) என்ற செயலுக்கு அங்கிகரிக்கப்பட்ட ஒரு முன்னுதாரணத்தை நாம் காண்கின்றோம். அப்போஸ்தலர்களின் காலத்தில், இப்படி சேகரித்த பணம், பொழுது போக்கிற்குச் செலவிடப்படவில்லை, ஆனால் அறிந்துள்ளபடி அவைகள் இரண்டு நோக்கங்களுக்காகச் செலவிடப்பட்டன: தர்ம காரியங்களுக்காகவும் (அப். 24:17; ரோமர் 15:25; 2 கொரி. 8:1-5; கலா. 2:10), சுவிசேஷ அறிவிப்பிற்காகவும் (1 கொரி. 9:14; பிலி. 4:14-16) அவை செலவிடப்பட்டன.*

*கர்த்தருடைய பந்தியை ஆசரிக்க வேண்டும் என்பது அப்போஸ்தலருடைய உபதேசங்களில் ஒன்று ஆகும், ஆனால் எவ்வளவு நாட்களுக்கு ஒருமுறை என்று குறிப்பிடவில்லை. இருப்பினும், சபை கூடிவருதல் (அப்போஸ்தலரின் முன்னிலையில்) "வாரத்தின் முதல் நாளில்" "அப்பம் பிட்கும்படி" (அப். 20:7) இருந்ததால், ஞானமுள்ள கிறிஸ்தவர்கள் அங்கீகரிக்கப்பட்ட இந்த முன்னுதாரணத்தையே இன்றைக்கும் செய்கின்றனர்.*

*"நாளானது (கர்த்தருடைய நாளானது) சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ" அவ்வளவாய் திங்கள் முதல்*

சனி வரை, கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் புத்தி சொல் வதைக் காணலாம் (எபி. 10:25). அன்புள்ள கிறிஸ்தவர்கள், தங்களைப் படைத்தவரையும், இரட்சகரையும், பரிசுத்த ஆவியானவரையும் ஆராதனையில் கனப்படுத்தவும், ஒருவருக் கொருவர் பக்தி விருத்தியூட்டவும் சந்தோஷமான ஒன்று கூடுதல்களை எதிர்நோக்குகின்றனர் (யோவா. 4:24; 1 தெச. 5:11). ஒரு கிறிஸ்தவர் சங்கீதம் 122:1ஐத் தழுவி, "கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்" எனலாம். பரலோகம், அவருக்குச் செய்துள்ளதைப் பாராட்ட வும், அதை வெளிப்படுத்தவும் அவர் உணருகிறார்.

*மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல,*
*தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.*
*என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே*
*தாகமாயிருக்கிறது;*
*நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து*
*நிற்பேன்?*
*உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும்*
*என்னிடத்தில் சொல்லுகிறபடியால்,*
*இரவும், பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று.*
*முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே*
*கூட நடந்து,*
*கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே*
*தேவாலயத்திற்குப் போய்வருவேனே;*
*இவைகளை நான் நினைக்கும்போது என் உள்ளம்*
*எனக்குள்ளே உருகுகிறது (சங். 42:1-4).*

# ஞானஸ்நானம்: ஒரு பிரிக்கும் கோடு

| ஞானஸ்நானத்திற்கு முன்பு | | ஞானஸ்நானத்திற்குப் பின்பு |
|---|---|---|
| *பாவத்தின் குற்றம்* | *மத். 28:18-20; மாற். 16:15-18; லூக். 24:46-49* | *பாவத்திற்கு மன்னிப்பு* |
| *இரட்சிப்பற்ற நிலை* | *மாற். 16:16; 1 பேது. 3:21* | *இரட்சிக்கப்பட்ட நிலை* |
| *பாவங்கள் கழுவப்படவில்லை* | *அப். 22:16* | *பாவங்கள் கழுவப்பட்டன* |
| *பரிசுத்த ஆவியின் வரம் இல்லை* | *யோவா. 14:17; அப். 2:38; 5:32; கலா. 4:6; எபே. 1:13, 14* | *நமது சுதந்திரத்தின் அச்சாரமாகப் பரிசுத்த ஆவியின் வரம்* |
| *பிசாசின் பிள்ளைகள்* | *யோவான் 8:44; 2 கொரி. 6:16* | *தேவனுடைய பிள்ளைகள்* |
| *கிறிஸ்துவுக்குள் இல்லை* | *ரோமர் 6:3; கலா. 3:27* | *கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம்* |
| *தேவனுடைய இராஜ்யத்தில் இல்லை* | *யோவா. 3:5; கொலோ. 1:13* | *தேவனுடைய இராஜ்யத்தில் இருக்கிறோம்* |
| *"ஒரே சரீரமாகிய" சபையில் இல்லை* | *1 கொரி. 12:13; எபே. 1:22, 23* | *"ஒரே சரீரமாகிய" சபைக்குள் இருக்கிறோம்* |
| *ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் இல்லாதவர்கள்* | *எபே. 1:3* | *ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் உள்ளவர்கள்* |
| *பரிபூரண ஜீவனற்றவர்கள்* | *யோவா. 10:10* | *பரிபூரண ஜீவன் பெற்றவர்கள்* |
| *பரலோகத்தில் ஒரு சுதந்தரம் இல்லாதவர்கள்* | *1 பேது. 1:4* | *பரலோகத்தில் ஒரு சுதந்தரத்தைப் பெற்றுள்ளவர்கள்* |